**திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: திரு. பா. முருகேஷ், இ.ஆ.ப.,**

**செ.மு.எண். 1336/2023/ஆ** **நாள். .05.2023**

**பொருள்:** பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – வேலூர் மண்டலம் – திருவண்ணாமலை மாவட்டம் – பேரூராட்சிகளில் அரசாணை எண்.125 நாள்.27.05.1999ன்படி அரசாணை எண்.76 நாள்.31.05.2019ன்படியும் நியமனம் செய்யப்பட்டது – 02.06.2001 முதல் முன்தேதியிட்டு கருத்தியலாக இளநிலை உதவியாளர் / வரித்தண்டலராக பணி நியமனம் செய்யப்பட்டது – கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி – வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் – குமார் (திரு) பா என்பவர் வரித்தண்டலர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது – சார்பு.

**பார்வை:**
1. அரசாணை (நிலை) எண். 125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை நாள்.27.05.1999.
2. அரசாணை (நிலை) எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை நாள்.31.05.2019.
3. சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.984/2013/அ3, நாள்.28.11.2019.
4. சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.984/2013/அ3, நாள்.23.08.2021.
5. அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, அவர்களின் கடிதம் எண்.360/பேரூ1/2023–4, நாள்.08.03.2023. இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற நாள்.23.03.2023.
6. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.929/2023/ஆ, நாள்.17.04.2023.
7. கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் ந.க.எண்.70/2023, நாள்.24.04.2023.
8. தொடர்புடைய ஆவணங்கள்.

------

**உத்தரவு**

அரசாணை (நிலை) எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப3) துறை நாள்.27.05.1999ன்படி, பேரூராட்சிகளில் இருந்த நுழைவுப் பணியிடங்களில் (Enter Level Post) பணியமர்த்தப்பட்ட பணியாளர்களை கல்வித் தகுதியின் அடிப்படையில் சிறப்பின நிகழ்வாக ஒருமுறை மட்டும் (One Time Consideration) பணியாளர்களை கீழ்நிலை பணியில் நியமனம் செய்யப்பட்ட நாளின் அடிப்படையில் கருத்தியலாக இளநிலை உதவியாளர் / வரித்தண்டலராக நியமனம் செய்திட அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.31.05.2019ன்படி ஆணையிடப்பட்டது. இவ்வரசாணையில் குறிப்பிடப்பட்ட பணியாளர்களை கீழ்நிலைப் பணியில் நியமனம் செய்யப்பட்ட நாளான 02.06.2001 முதல் கருத்தியலாக (Notionally) நியமனம் செய்து ஈர்த்து கொள்ளலாம் என அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி உத்தரவுகள் மற்றும் அரசாணையின்படி, திரு. பா. குமார் என்பவர் வரித்தண்டலராக திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் பேரூராட்சியில் 04.12.2019 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில் பேரூராட்சிகளில் அரசாணை (நிலை) 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.05.2019ன்படி பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பணியினை 02.06.2001ல் உரிய நியமன அலுவலரால் (Appointing Authority) வரன்முறைப்படுத்திடவும், மேற்படி அரசாணைக்கு எதிராக தொடரப்பட்ட W.P.No.17989/2019, W.P.No.23426/2019, W.P.No.21574/2019 மற்றும் W.P.No.27597/2019 ஆகிய வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் வரன்முறைபடுத்தப்பட வேண்டுமென பார்வை 5ல் காணும் கடிதம் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசு கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க, இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் ஆகியோர் நிலையில் பணிவரன்முறை செய்திட சம்மந்தப்பட்ட பணியாளரது பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் சம்பளமில்லா விடுப்பு / தண்டனைக் காலம் ஏதுமில்லததால் தனியருக்கு கருத்தியலாக (Notionally) 02.06.2001ம் தேதி முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட வேண்டி பார்வை 7ல் காணும் கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் கருத்துரு சமர்ப்பித்துள்ளார்.

| வ. எண் | பணியாளர் பெயர் பதவி மற்றும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | கருத்தியலாக (Notionally) பணியில் ஈர்த்துக்கொள்ளப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு. பா. குமார்,<br>வரித்தண்டலர்,<br>கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி,<br>திருவண்ணாமலை மாவட்டம். | 04.12.2019 | 02.06.2001 |

மேற்படி தனியரது பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் சம்பளமில்லா விடுப்பு / தண்டனைக் காலம் ஏதுமில்லாததால் தனியருக்கு 02.06.2001ம் தேதி முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பணியாளரது பணியினை வரன்முறை செய்த விவரத்தினை பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

<u>நிபந்தனை</u>

1. அரசாணை (நிலை) 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.05.2019ன்படி பணி நியமனம் செய்யப்பட்ட மேற்படி பணியாளரின் பணியினை கருத்தியலாக (Notionally) ஈர்த்துக்கொள்ளப்பட்ட நாளான 02.06.2001 முதல் பணியினை மேற்படி அரசாணைக்கு எதிராக தொடரப்பட்ட W.P.No.17989/2019, W.P.No.23426/2019, W.P.No.21574/2019 மற்றும் W.P.No.27597/2019 ஆகிய வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் தனியரின் பணியினை வரன்முறை செய்யப்படுகிறது.

15/05/23

மாவட்ட ஆட்சியர்,
திருவண்ணாமலை.

பெறுநர் :
திரு. பா. குமார்,
வரித்தண்டலர்,
கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி, திருவண்ணாமலை மாவட்டம். (செயல் அலுவலர் மூலமாக)

நகல் :
1. பேரூராட்சிகளின் இயக்குநர் நகர் நிர்வாக அலுவலக வளாகம், சென்னை– 28.
2. செயல் அலுவலர், கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி, திருவண்ணாமலை மாவட்டம்.
3. இருப்புக்கோப்பு–ஆ.